**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 13/2018</u>**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22–ம் நாள் திங்கள்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | கார்த்திக் | தொழில் |
| த/பெ | மனோகரன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** இதே சொத்தைப் பொறுத்து காங்கேயம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் **200/2016** என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு இந்த வழக்கின் பிரதிவாதிகள் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு **07.09.2016** ம் வருடம் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு பிரதிவாதிகள் எதிர்வாதம் தாக்கல் செய்து மேற்படி வழக்கு விசாரணைக்காக **15.11.2023** ஆம் தேதி வாய்தா இடப்பட்டு இருந்தது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி வழக்கு மேற்படி தேதியில் நானும் என்னுடைய வழக்கறிஞரும் முன்னிலையாகாததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் தேதி எனக்கு சரியாக நினைவில்லை ஆனால் தள்ளுபடி செய்யப்பட்டது மீண்டும் அந்த வழக்கை கோப்பு எடுக்க மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

2. மேற்படி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 26.08.2016 ஆம் தேதி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன் தேதி நினைவில்லை. 29.08.2016 ஆம் தேதி காங்கேயம் காவல்துறைக்கு நான் ஒரு அறிவிப்பை கொடுத்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு அறிவிப்புகளையும் இரண்டாம் பிரதிவாதி மூன்றாம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 22.07.2017–ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தையும் மேற்படி வழக்கில் ஒப்படைத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் மேற்படி இரண்டு அறிவிப்புகளையும் மற்றும் 22.07.2017 தேதியிட்ட கிரையப பத்திரத்தையும் வழக்கு மூலமாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான் அதை தவிர வேறு வழக்கு மூலங்களையும் சொல்லி உள்ளேன். மேற்படி மூன்று தேதியிட்ட வழக்கு மூலத்தை தான் இந்த வழக்கிலும் வழக்கு மூலமாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. என்னுடைய வழக்குரையின் 12 வது பேராவில் என்னுடைய தகப்பனார் 1–ம் பிரதிவாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு ஆவணம் எழுதிக் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை கடன் வாங்கி இருந்தோம் தேதி எனக்கு நினைவில்லை.

3. 12.09.2013 ஆம் தேதி 1–ம் பிரதிவாதிக்கு நாங்கள் கிரைய ஒப்பந்தம் எழுதி ஒன்றை எழுதிக் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரிதான் ஆனால் அது கடனுக்காக எழுதப்பட்டது சொத்தை விற்பனை செய்வதற்காக எழுதி கொடுக்கப்பட்டது அல்ல. மேற்படி பத்திரம் கடனுக்காக தான் எழுதிக் கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை என்னுடைய வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் என்னுடைய வழக்குரையில் அதை குறித்து நான் சொல்லியுள்ளேன். என்னுடைய வழக்குரையில் 02.09.2016 ஆம் தேதி 1–ம் பிரதிவாதி எங்கள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன். அசல் வழக்கு எண்.200/2016 வழக்கு 07.09.2016 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் இந்த வழக்கு 09.01.2018 ஆம் தேதி

பதிவு செய்யப்பட்டது என்று சொன்னாலும் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்த பிறகுஒரு வருடம் ஆறு மாதம் 14 நாட்களில் எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல இருந்து கொண்டு தான் இருந்தது.

4. மேற்படி காலகட்டத்தில் நில அபகரிப்பு தொடர்பாகவும் கமிஷனர் அலுவலகத்திலும் புகார் கொடுத்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணங்கள் உள்ளது. கிரைய பத்திரம் பதிவு செய்ததற்கு பிறகு 1–ம் பிரதிவாதி முறைப்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா பெற்றுள்ளார் என்று சொன்னால் முறைப்படி பெறவில்லை மோசடி செய்து பெற்றுள்ளார். அசல் வழக்கின் 200/2016 இல் 1–ம் பிரதிவாதி எங்களை மோசடி செய்து கிரைய பத்திரம் பதிவு செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான் மேற்படி பத்திரத்தை ரத்து செய்யக் கோரியோ மேற்படி கிரயம் மோசடியானது என விளம்பரச் செய்ய கோரியோ நான் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல கோரியுள்ளேன். மேற்படி வழக்கிலும் கிரயத்தை ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துவிட்டு அதே பரிகாரத்தை இந்த வழக்கிலும் நான் கோரியுள்ளதற்கான காரணம் என்ன என்றால் அவர்கள் மேலும் மேலும் தவறு செய்து கொண்டிருந்ததால் இந்த வழக்கிலும் கோரியுள்ளேன். மேற்படி வழக்கில் இந்த வழக்கில் மேற்படி பரிகாரத்தை கோருவதற்கு அனுமதி கோரவில்லை என்றாலும் மேற்படி வழக்கில் மேற்கண்ட ரத்து பரிகாரத்தை நான் கைவிடவில்லை என்றாலும் இந்த வழக்கிலும் மேற்படி வழக்கிலும் மேற்படி ரத்து பரிகாரம் கோருவதாக நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. 2013 ஆம் வருடம் கடன் பெற்ற போது நாங்கள் கிரைய உடன்படிக்கை பத்திரம் ஒன்றை கடனுக்காக எழுதிக் கொடுத்தோம்.மேற்படி கிரைய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல் செய்துள்ளோம். 1–ம் பிரதிவாதியிடம் சொத்தின் மூல பத்திரத்தை ஒப்படைத்ததாக வழக்குரையின் பன்னிரண்டாவது பத்தியில்

குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அது குறித்து எனக்கு நினைவில்லை. அப்போது ரொக்கமாக ரூபாய் 3 லட்சம் வாங்கினோம். 1–ம் பிரதிவாதி வேண்டுகோளுக்கு இணங்க நாங்கள் கிரைய உடன்படிக்கை எழுதிக் கொடுத்த தேதி தற்போது எனக்கு நினைவில்லை. 1–ம் பிரதிவாதியின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு பொது அதிகார பத்திரத்தை நாங்கள் இரண்டாம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக என்னுடைய வழக்குரையின் 12 வது பத்தியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டாம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியின் வேலைக்காரர் ஆவார். இரண்டாம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதியின் அலுவலகத்திற்கு அருகில் இருக்கும் வீட்டில் குடியிருக்கிறார்.

6. வழக்கு தாக்கல் செய்யும்போது 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் முகவரியை நான்தான் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்தேன். அவரது ஆதார் அட்டையில் இருந்த முகவரியை கொடுத்தேன் ஆனால் அவர் கோயமுத்தூரில் தான் குடியிருக்கிறார். கோயமுத்தூரில் இரண்டாம் பிரதிவாதி குடியிருப்பதை நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை. அவர் அங்கு குடியிருப்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2–ம் பிரதிவாதி தற்போது குடியிருக்கும் விலாசம் என குறிப்பிட்டு வழக்குரையில் எந்த விலாசத்தையும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதி தென்காசி முகவரியில் தான் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்ததாக கூறப்படும் கிரைய ஒப்பந்தத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியவில்லை.

7. 13.09.2013 தேதியில் ICICI வங்கியில் இருந்து மூன்றாம் பிரதிவாதி பெயரில் ரூபாய் ஒரு லட்சம் காசோலைஎண். 506720 மற்றும் அதே தேதியில் வாதியின் பேரில் அதே வங்கியில் காசோலை எண். 506719 ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையும் அதே தேதியில் 1–ம் பிரதிவாதியின் பெயரில் விஜயா பேங்க் கோயம்புத்தூரில் காசோலை எண்.598390 காசோலையின்படி

ரூபாய் ஒரு லட்சம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு நினைவில்லை. 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்தம் தான் உண்மையானது என்றாலும் மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் 23/7/2016 இல் எழுதப்பட்ட கிரையம் உண்மையானது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இரண்டு வழக்குகளிலும் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த கோரிக்கையும் வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 23/7/2016 ஆம் தேதி நாங்கள் மூவரும் ரூபாய் 37 லட்சம் பெற்றுக் கொண்டு ரசீது எழுதிக் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண். 200/2016 மற்றும் இந்த வழக்கிற்கும் வழக்கு மூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்து வழக்குரையில்பஞ்சாப் நேஷனல் வங்கியில் என்னுடைய தகப்பனார் கடன் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால்கடன் பெற்றதாக குறிப்பிடவில்லை In Principle Sanction வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன். வழக்குரையில் அதை நான் குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய தகப்பனாருக்கு வேறு சொத்துக்கள் உள்ளது. தாவா சொத்துக்கான பத்திரத்தை பஞ்சாப் நேஷனல் வங்கியில் என்னுடைய தகப்பனார் பெற்ற கடனுக்காக ஒப்புவித்தோம் என்றால் சரிதான். அசல் ஆவணமில்லாமல் மேற்படி வங்கி மேலாளர் எனக்கு In Principle Sanction வழங்கினாரா என்றால் வழங்கினார். திருவேங்கடம் வங்கிக்கு நேரடியாக வந்து அசல் பத்திரத்தை காட்டினார். மேற்படி In Principle Sanction உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தெரியவில்லை. என்னுடைய அப்பா வாங்கிய கடனுக்கு நாங்கள் மூவரும் ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுத்தோமா என்றால் இல்லை. என்னுடைய அப்பாவின் பெயர் சொத்து இல்லாமல் நாங்கள் கொடுத்த ஜாமின் பத்திரத்தின் அடிப்படையில் கடன் வழங்கப்பட்டதா என்றால் நான் அப்படி கூறவில்லை. மேற்படி திருவேரகன் வங்கிக்கு வந்தபோது கிரைய உடன்படிக்கை பத்திரம் அமலில் இருந்ததா அல்லது கிரைய பத்திரம்

ஏற்படுத்தப்பட்டிருந்தது என்றால் அதற்கு முன்பே வங்கிக்கு அவர் வந்தார். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தை பொறுத்து வில்லங்கச் சான்று எடுத்து பார்த்தபோது அதில் நாங்கள் இரண்டாம் பதிவாதிக்கு கொடுத்த பொதுஅதிகார பத்திரம் மற்றும் 1—ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய உடன்படிக்கையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கி மேலாளர் எங்களிடம் மேற்படி ஆவணங்களை குறித்து ஒப்புதல் கடிதம் எதுவும் எழுதி வாங்கினார்களா என்றால் இல்லை.

**9.** அனிதா மங்கலாம்பிகை எங்கள் மூவருக்கும் எழுதிக் கொடுத்த அசல் கிரைய பத்திரம் திருவேரகனிடம் உள்ளது. மேற்படி கடன் தொடர்பாக வழக்கறிஞர் கருத்துரை பெற்றோமா என்றால் இல்லை. நான் குறிப்பிட்ட நிகழ்வுகள் எதுவும் வங்கியில் நடைபெறவில்லை என்றாலும் **In principle Sanction** வழங்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. 1—ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி நாங்கள் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு அளித்து மேற்படி மனு சிவில் வழக்கு நிலுவையில் இருக்கும் காரணத்தைக் காட்டி ஏற்கனவே வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாதிகள் ஆகிய எங்கள் மூவருக்கும் **Life Certificate** பெறுவதற்காக இரண்டாம் பிரதிவாதி கோயம்புத்தூர் இ எஸ் ஐ மருத்துவமனை மருத்துவர் பெரியசாமி என்பவர் முன்பு ஆஜர் செய்தார் என்று சொன்னால் சரியில்ல. மேற்படி மருத்துவர் பெரியசாமி வழங்கிய **Life Certificate** வா.சா.ஆ.4 உடன் இணைக்கப்பட்ட விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி மருத்துவர் பெரியசாமி மீது நடவடிக்கை எதுவும் நான் எடுத்தேனா என்றால் அறிவிப்பு அனுப்பி உள்ளேன். அவ்வாறு அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**10.** மேற்படி கிரையம் மோசடியானது எனக் குறிப்பிட்டு சார் பதிவாளரிடம் ஏதேனும் ஆட்சேபணை தெரிவித்துள்ளோமா என்றால் தெரிவித்துள்ளோம். மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் வாதிகளுடையது அல்ல என்பதை நிரூபிக்க அவற்றை கையெழுத்து நிபுணரின் கருத்துரைக்கு அனுப்ப

முயற்சி செய்தோமா என்றால் இல்லை. அசல் வழக்கு எண். 200/2016 வழக்கில் LIfe certificate மோசடியாக பெறப்பட்ட சங்கதியை குறிப்பிட்டுள்ளோம். எனக்கு மருத்துவர் திரு.பாலசுந்தர்ராஜ் என்பவரை ஐந்து ஆண்டுகளாக தெரியும். வா.சா.ஆ.6 யை என்னுடைய அம்மா மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட போது வாங்கினோம். 02.07.2017 ஆம் தேதி கிரையம் நடந்துள்ள சூழ்நிலையில் மருத்துவமனைக்கு சென்ற என்னுடைய அம்மா அதற்கு அதற்கு பின்னிட்ட நாளில் Discharge செய்யப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான் என்னுடைய அம்மா மூன்று நாட்களும் உள்நோயாளியாகத்தான் அனுமதிக்கப்பட்டிருந்தார். மூன்று நாட்களும் கடுமையான காய்ச்சல் மற்றும் வயிற்றுபோக்கு இருந்தது. மேற்படி ஆவணம் வழங்கப்பட்ட போது மருத்துவர் பாலசுந்தரராஜ் காங்கேயம் மருத்துவமனையில் அரசு மருத்துவராக இருந்தார் என்று சொன்னால் தெரியவில்லை.

11. மேற்படி ஆவணத்தை அசல் வழக்கின் 200/2016 வழக்கிலும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போதும் ஒப்படைக்காமல் பின்னிட்டு மனு தாக்கல் செய்து ஒப்படைத்துள்ளேன் என்று சொன்னால் மேற்படி ஆவணத்தை ஏற்கனவே ஒப்படைத்து இருந்தேன். மேற்படி ஆவணத்தை என்னுடைய அம்மா மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட போது நான் தான் கையெழுத்து போட்டு வாங்கினேன். மேற்படி மருத்துவமனையின் பெயர் மருத்துவர் பாலசுந்தரராஜ் மருத்துவமனை ஆகும். மேற்படி ஆவணத்தை மருத்துவமனையில் வைத்திருந்த ஆவணத்தை பார்வையிட்டு எழுதிக் கொடுத்தார். அவரை சாட்சியாக விசாரணை செய்ய இருக்கிறோம். வா.சா.ஆ.6–ல் நான் குறிப்பிட்டவாறு என்னுடைய அம்மாவுக்கு காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கும் என்னுடைய அப்பாவுக்கும் மேற்படி மருத்துவர் பழக்கம் என்ற அடிப்படையில் மேற்படி ஆவணம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனவே தான் கிரைய பத்திரம் பதிவு செய்த அதற்கு ஒரு நாள் முன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அதற்கு

மறுநாள் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் ஆவணம் பெற்று சமர்ப்பித்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 3-ம் வாதி தற்போது டெல்லியில் இருக்கிறார். குடிமைப்பணி தேர்வாணைய தேர்வுக்காக அவர் டெல்லியில் இருக்கிறார். தனியார் கோச்சிங் சென்டரில் படித்து வருகிறார்.

12. 22.07.2016 ஆம் தேதி மூன்றாம் பிரதிவாதி டெல்லியில் தனியார் கோச்சிங் சென்டரில் படித்து வந்தார் என்பதை காட்ட ஆவணங்களின் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி தேதிகள் என்னுடைய அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாகவும் என்னுடைய சகோதரர் டெல்லியில் தனியார் கோச்சிங் சென்டரில் படித்ததாகவும் எதற்காக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் மேற்படி தேதியில் லைவ் செர்டிபிகேட் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளோம். லைட் செர்டிபிகேட் பெறப்பட்ட தேதியும் கிரயம் பெறப்பட்ட தேதியும் நான் குறிப்பிடும் தேதியும் வேறு வேறு ஆனவை என்று சொன்னால் அது குறித்து தெரியவில்லை. மேற்படி விபரங்களை அசல் வழக்கு எண். 200/2016-ல் குறிப்பிட்டுள்ளேன்.

13. 2-ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையம் உண்மையானது என்றாலும் அதற்குரிய தொகைகளை நாங்கள் ஏற்றுவே பெற்று விட்டோம் என்றாலும் அதை மறைத்து பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து காங்கேயத்தில் இருந்து கோயம்புத்தூர் செல்லும் முதன்மை தேசியநெடுஞ்சசாலையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் வழிகாட்டு மதிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் அருகில் உள்ள பூமி விற்கப்பட்டதற்கான மதிப்பை காட்டும் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் மதிப்பு ஒரு கோடியே 80 லட்சம் விற்கும் சூழ்நிலையில் பஞ்சாப் நேஷனல் வங்கியில் 3 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் அதனுடைய மார்க்கெட் மதிப்பு 7 கோடி ரூபாய் ஆகும்.

பிரதிவாதிகள் அசல் வழக்கில் 200 /2016 இல் தங்களுடைய எதிர்வாதத்தை தாக்கல் செய்த பிறகு மேற்படி வழக்கின் வழக்குரையை திருத்த முயற்சி செய்யாததற்கு என்ன காரணம் என்று சொன்னால் அது பற்றி தெரியவில்லை.

14. 1–ம் பிரதிபாதியிடம் என்னுடைய அப்பா ரூபாய் 3 லட்சம் கடன் பெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை என்னுடைய அப்பாவிடம் கேட்க வேண்டும். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டவாறு எனது அப்பா கடன் பத்திரம் எழுதிக் கொடுத்த விபரம் உண்மையானது. என்னுடைய அப்பா மனோகரையோ அல்லது பஞ்சாப் நேஷனல் வங்கியின் மேலாளரையோ சாட்சியாக விசாரிக்க இருக்கிறேனா என்றால் என்னுடைய அப்பாவை சாட்சியாக விசாரிக்க இருக்கிறேன். இரண்டு வழக்கின் வழக்குரைகளிலும் இரண்டாம் பிரதிவாதி தான் எங்களுக்கு ரூபாய் 40 லட்சம் தர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்தில் நாங்கள் விவசாயம் செய்து வருவதை காட்ட அதன் அடங்கலை ஒப்படைத்துள்ளேன் மற்றும் பட்டா சிட்டா ஆகிவற்றை ஒப்படைத்துள்ளேன். நாங்கள் மூவரும் அனிதாமங்கலாம்பிகை என்பவரிடம் பெற்ற கிரைய பத்திரத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கில் சொத்து விவரத்தை தாவாவில் குறிப்பிட்டுள்ளேன்.

15. பிரதிவாதிகள் க.சா.எண். 297 /1 நிலத்தில 25 செண்ட் நிலமும் கா.சா.எண் 297/2 ல் 6.84 சென்ட் நிலம் கிரயம் பெற்றார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கு கிணற்று பாசனமும் ஆற்றுப் பாசனமும் போர்வெல் பாசனமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல எங்களுடைய போர்வெல் பாசனம் உள்ளது. அசல் வழக்கின் 200 ரூபாய் 2016 வழக்கை உறுத்து கட்டளைக்காக தாக்கல் செய்துவிட்டு அதை வைத்து நாங்கள் பிரதிவாதிகளை மிரட்டி வந்தோம் என்று சொன்னால் சரி அல்ல. கிரைய சமயத்தில் என்னுடைய அம்மா மருத்துவமனையில் இருந்ததாகவும் என்னுடைய தம்பி டெல்லியில் தனியார் கோச்சிங் சென்டர் படித்து வந்ததாகவும் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மூவரும் திருவேங்கடத்திற்கு எழுதிக்

கொடுத்த கிரைய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியில்ல. மூன்று லட்சம் காசோலை மூலமாகவும் ரூபாய் 37 லட்சம் ரசீது மூலமாகவும் பெற்றுக் கொண்டு அதை இல்லை என்று நான் வேண்டுமென்றே மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.09.22 19:05:20 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.